# தினசரி சந்தை நிலவரம் ஏற்படுத்திய மாற்றம் மற்றும் எனது அனுபவம்

R.K.N விஜய் அருண்
K K. தோட்டம்
பொன்னொலி நகர்
வரகூர் அஞ்சல்
ஆத்தூர் (TK), சேலம் (DT)
செல்: 9488542352/ 9486791182



என் பெயர் ஆர்.கே.விஜய்அருண் நான் பொன்னொலி நகர் கிராமத்தில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். இதற்கு முன்னால் 14 வருடம் தொடர்ந்து 1991 இல் இருந்து 2007 வரை விதை பருத்தி 5 ஏக்கர் பரப்பளவில் பயிர் செய்து வந்தேன். இப்போது தோட்டத்தில் சில வருடங்களாக "கத்தரி" பயிர்செய்து வருகிறேன். சற்று முன்னால் "வரி கத்தரிக்காய்" மகசூல் செய்தேன். அதை என் கிராமத்திற்கு அருகே உள்ள "தலைவாசல் தினசரி காய்கறி சநதையில் விற்று வந்தேன். அதை வெளிமார்கெட்டின் வினா நிலவரம் தெரியாமலும் மற்றும் கத்திரியில் வேறு ரகம் பற்றிய தகவல் எதையும் தெரியாமல் இருந்ததனாலயும் இங்கு அதிகம் விற்கும் வரிக்காய் மட்டும் பயிர் செய்து இலாபம் பெற முடியாமல் தலைவாசல் சந்தையில் விற்று வந்தேன்.

நான் காய்களை விற்கும் போது "வேளாண் மற்றும் தோட்டக்கலை விளை பொருட்களின் தினசரி சந்தை நிலவரத்தை பற்றி கேள்விபட்டேன். இந்த தொடர்பை எப்படி பெறுவது என்று விசாரித்த போது திரு.பாலாஜி அவர்களை சந்தித்தேன். என்னுடைய சந்தேகத்தினை அவரிடம் நிவர்த்தி செய்து கொண்டேன். பிறகு இணையதளம் மற்றும் குறுந்தகவல் மூலம் எல்லா வசதிகளும் உள்ளது. ஆகவே நீங்கள் இவற்றின் மூலமாக பல்வேறு சந்தை நிலவரத்தினை தெரிந்து கொள்ளலாம் என அறிமுக படுத்தினார். இது எனக்கு மிகவும் பயனுள்ளதாக தெரிந்தது. நான் இணையதளம் மூலமாக காணமுடியாததால் குறுந்தகவல் முறை எனக்கு அவசியமாக காணப்பட்டது.

இதனால் நான் மற்ற சந்தை நிலவரத்தினையும் அறிய எனக்கு வாய்ப்பு கிடைத்தது. அந்த வாய்ப்பை பயன்படுத்த இந்த ஆண்டு நான் "பவானி" என்ற கத்தரி வகையை நான் முதன் முதலில் இங்கு பயிர் செய்தேன் ஆனால் இங்கு என் கிராமத்தில் வேறுயாரும் இக்கத்தரி வகையை பயிர் செய்வதில்லை மற்றவர்களும் இந்த வகை "பவானி" கத்திரியை பயிர் செய்தால் தலைவாசல்

மார்கெட்டில் விற்க முடியாது என்று சிலர் என்னிடம் சொன்னார்கள். நான் இதற்கு முன்பே எங்கு விற்க முடியும் என்று அறிந்ததினால் என்னுடைய தோட்டத்தில் 4.5 ஏக்கர் "பவானி" கத்தரிக்காயை பயிர் செய்தேன். இக்குறுந்தகவளை வைத்துக் கொண்டு (சிதம்பரம், விழுப்புரம் விருத்தாசலம் மற்றும் திருச்சி) ஆகிய முக்கிய ஊர்களில் அதிகமாக விற்பனை ஆகிறது என மற்ற வியாபாரிகளின் மூலமாக அறிந்து கொண்டேன்.

இதற்கிடையில் ஒட்டன்சத்திரம், திருச்சி, கும்பகோணம், பண்ருட்டி ஆகிய சந்தை நிலவரம் நீங்கள் அறிமுகப்படுத்தியது. எனக்கு மிகவும் பொருத்தமாக அமைந்துவிட்டது. இது மட்டும் அல்லாமல் நான் மற்றும் என்னுடைய நண்பர்களின் தோட்டத்தில் குறிப்பாக (ஜெயவேல், மணி, ஜெகதீஸ் மற்றும் சில விவசாயிகள் அவர் அவர்களும் சுமார் 1.5 ஏக்கர் பரப்பளவில் "பவானி" குண்டுகாயை பயிர் செய்து உள்ளோம். நாங்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து இந்த குறுந்தகவளை பயன்படுத்தி மொத்த விலைக்கு ஒன்று சேர்ந்து செல்ல வசதியாக இருக்கிறது. அதனால் தினம் தினம் தலைவாசல் தினசரி சந்தைக்கு வருவதை குறைத்துக் கொண்டு மொத்தமாக (பண்ருட்டி, சிதம்பரம், மற்றும் திருச்சி) சந்தைக்கு விலை நிலவரத்திற்கு ஏற்றவாரு அனுப்பியதால் எனக்கும் மற்றும் என்னுடைய நண்பர்களுக்கும் செலவு குறைவாகவும் அதிக இலாபம் பெற வாய்பாக உள்ளது.

நான் 4.5 ஏக்கரில் பயிர் செய்ததில் கிடைத்த வருமானம் மற்றும் செலவினை கிலோ கணக்கில் கீழ்கண்டவற்றில் கூறுகிறேன்.

உற்பத்தி செலவு - 1கிலோ - 2.60 ரூபாய்

தின பரிப்பு செலவு - 1கிலோ - 1.00 ரூபாய்

கொண்டு செல்லும் சந்தை செலவு - 1 - 65 பைசா

மொத்தம் = 4.25

நான் தினந்தோரும் சுமார் 850 கிலோவில் இருந்து 1050 கிலோ வரை ஏற்றுமதி செய்தேன் எனக்கு 1 ஏக்கரில் மட்டும் இதுவரை 40,000 இலாபம் கிடைத்துள்ளது. தற்போதும் விளைந்து வருகிறது மற்றும் எனக்கும் என்னை போன்ற விவசாயிகளுக்கும் இந்த குறுந்தகவல் தொடர்ந்து கிடைக்க "தமிழ்நாடு விவசாய பல்கலைக்கழகத்திடம் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழத்திற்கு ஓர் முக்கிய வேண்டுகோள்

அதாவது எனக்கும் மற்ற விவசாயிகளுக்கும் குறுந்தகவலில் ஓர் காய்கறி நிலவரத்தினை மட்டும் தெரிவிக்கிரீர்கள் தயவு கூர்ந்து விவசாயிகளின் தேவைக்கு ஏற்ப மற்ற குறிப்பிட்ட காய்கறி நிலவரத்தினையும் ஒரே கைப்பேசிக்கு அனுப்பினால் நானும் மற்றும் அனைத்து விவசாயிகளும் அதிக பயனடைய வாய்ப்பு உள்ளது. எனவே எனது வேண்டு கோளை நிவர்த்தி செய்து கொடுக்குமாறு மிகவும் பணிவன்புடன் கேட்டுக்கொண்டு என்னுடைய மகிழ்ச்சியினையும் பகிர்ந்து கொண்டு வாய்பளித்த “தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு என் மணமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.